**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

அ.வ.எண்.234/2022 பி.வா.சா.1 கிருஷ்ணவேணி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 10.02.2026

**( 3 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனக்கு 3 ம் பிரதிவாதியிடம் இருந்து எவ்வித தகவலும் வரவில்லை என சமர்பித்தார். எனவே 3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**( 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என அரசு தரப்பு வழக்கறிஞர் கடந்த 29-01-2026 அன்றே சமர்ப்பித்துள்ளார்)**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி என் பக்கத்து தோட்டத்துக்காரரர் என்றால் சரிதான். இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்ற முழு விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி தரப்பு ஆவணங்களின் முழு விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2) எனக்கு எந்த காலையில் எவ்வளவு பரப்பளவு சொத்து பாத்தியம் என்றால் க.சஎண். 208 ல் 1 ஏக்கர் 47 சென்ட் பாத்தியம் ஆகும். மேற்படி சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அது என் மாமனார் கோபால்சாமியின் சொத்தாக இருந்து அதை அவர் அவரது அக்கா ராசாத்தி அம்மாளுக்கு 40 சென்டும் அவரது அக்கா மகன்களுக்கு 1 ஏக்கரும் எழுதி கொடுத்தார் . நான் மேற்படி ராசாத்தி அம்மாள் மற்றும் அவரது மகன்களிடம் இருந்து என் சொத்தை கிரையம் பெற்றேன். நான் மேற்படி 1 ஏக்கர் 47 சென்ட் சொத்தை நான் கிரையம் பெற்றதாக சொல்லும் கிரைய ஆவணத்தை நாளது தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) க.ச.எண். 208 ல் எத்தனை உட்பிரிவுகள் உள்ளன என்றால் இரண்டு உள்ளன. க.ச.எண். 208 /2 ல் எவ்வளவு பரப்பளவு சொத்து உள்ளது என்றால் 3 ஏக்கர் 47 சென்ட் உள்ளது.

க.ச.எண். 208 /1 ல் 4 ஏக்கர் 10 சென்ட் சொத்து உள்ளது என்றால் சரிதான். க.ச.எண். 208 /1 ல் தான் எனக்கு பாத்தியப்பட்ட 40 சென்ட் சொத்து உள்ளது என்றால் சரிதான். க.ச.எண். 208 /1 ல் தான் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தும் உள்ளது என்றால் சரிதான்.

4) எனக்கு பாத்தியப்பட்ட 40 சென்ட் சொத்திற்கு வடபுறம் என்ன உள்ளது என்றால் மில்லுக்காரர் தோட்டம் உள்ளது. அதன் காலை எண் தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட 40 சென்ட் சொத்திற்கு தென்புறம் என்ன உள்ளது என்றால் சுப்பிரமணிய கவுண்டர் பூமி உள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட 40 சென்ட் சொத்திற்கு மேல்புறம் என்ன உள்ளது என்றால் சுப்பிரமணிய கவுண்டர் பூமி உள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட 40 சென்ட் சொத்திற்கு கிழபுறம் என்ன உள்ளது என்றால் பழனிசாமி கவுண்டர் பூமி உள்ளது.

5) எனக்கு பாத்தியப்பட்ட 40 சென்ட் சொத்திற்கு தென்புறமும் , மேல்புறமும் இதே காலையில் உள்ள மீதமுள்ள சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட 40 சென்ட் சொத்திற்கு தென்புறமும் , மேல்புறமும் இதே காலையில் உள்ள மீதமுள்ள சொத்துக்கள் சுப்பிரமணிய கவுண்டருக்கு பாத்தியபட்டது என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணிய கவுண்டரின் மகன் தான் வாதி ராஜேந்திரன் என்றால் சரிதான். க.ச.எண்.208/1 ல் மேற்படி 40 சென்ட் சொத்தை தவிர பிற சொத்துக்கள் உள்ளனவா என்றால் உள்ளது.

6) நான் நாளது தேதி வரை மேற்படி 40 சென்ட் சொத்திற்கு தனி பட்டா பெறவில்லை என்றால் சரிதான். வாதி சார்பதிவக அலுவலகத்தில் தாக்கல் செய்த வா.சா.ஆ. 1 உறுதிமொழி பத்திரத்தில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் நான் அந்த ஆவணத்தை படிக்கவே இல்லை. அவ்வாறு எனில் வா.சா.ஆ. 1 ஆவணத்தை படிக்காமல் தான் நான் என் எதிர் வழக்குரை மற்றும் சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

7) க.ச.எண். 208/1 ல் உள்ள 4 ஏக்கர் 10 சென்ட் பூமியில் எனது சொத்தை எனது உரிமைமூல ஆவணங்கள் அடிப்படையிலும் வாதியின் சொத்தை வாதியின் உரிமை மூல ஆவணங்கள் அடிப்படையிலும் முறையாக அளந்து உட்பிரிவு செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

**( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி